**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 10/2020 P.W. 5/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மணி | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. கோலப்பன்பிள்ளை | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில்லை.**

1. நான் கொல்லன்விளை முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். கடந்த 2019ம் வருடம் 14ம் தேதி மாதம் ஞாபகம் இல்லை மாலை 04.00 மணிக்கு வாழைத்தோட்டத்திற்கு கொல்லன்விளை சாஸ்தான்குளம் அருகில் உள்ள பாலத்தினை தாண்டி செல்லும் போது பாலத்திற்கு அருகில் போலீசார் சம்பவம் தொடர்பாக வரைபடம் வரைந்து விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் சம்பவத்தை பற்றி என்னிடம் கேட்டு கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் தாணுபிள்ளை என்ற நபரும் கையொப்பம் செய்தார்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தர்கள்.

**குறுக்கு விசாரணை**

குற்றம் சுமத்ததப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து உத்தரவிடப்படுகிறது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 10/2020 P.W. 4/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. உஷா | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. கிருஷ்ணபிரசாத் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில்லை.**

1. நான் கொல்லன்விளை முகவரியில் வசித்து 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். கடந்த 11.02.2019ம் தேதி காலை 06.00 மணிக்கு ஆற்றிக்கு குளிக்க சென்ற போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவருடைய மாமியாரை கிழே போட்டு கழுத்தை கடித்துக் கொண்டிருந்தார். அதை பார்த்து நானும் பகவதியம்மாளும் தடுக்க சென்றோம். அதன் பிறகு ஆம்புலன்ஸ் வரவழைத்து மீனாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தர்கள்.

**குறுக்கு விசாரணை**

குற்றம் சுமத்ததப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து உத்தரவிடப்படுகிறது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 10/2020 P.W. 3/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. பகவதியம்மாள் | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. தாஸ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில்லை.**

1. நான் கொல்லன்விளை முகவரியில் வசித்து மாடு வளர்த்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். ஆற்றில் மாடு கழுவ, குளிக்க செல்லும போது அவரை பார்த்துள்ளேன். கடந்த 11.02.2019ம் தேதி நான் காலை 06.00 மணிக்கு மாடு கழுவ சென்ற போது மீனா வை குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீட்டின் வெளியில் வைத்து கம்பியால் தலையில் அடித்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. மீனா வை தரையில் போட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர் கழுத்தில் கடித்து கொண்டிருந்தார். அதை பார்த்து நானும் உஷாவும் அங்கு சென்று குற்றம்சுமத்தப்பட்ட நபரை இழுத்த போது அவர் விடவில்லை. மீனா மயங்கி விழுந்துவிட்டார். ஆம்புலன்ஸ் வரவழைத்து மீனாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.இது சம்பந்தமாக மீனா புகார் கொடுத்துள்ளார். போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தர்கள்.

**குறுக்கு விசாரணை**

குற்றம் சுமத்ததப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து உத்தரவிடப்படுகிறது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 10/2020 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. அனிஷா | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ.சதீஷ் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மணக்கரை முகவரியில் வசித்து வீட்டில் இல்லத்தரசியாக சென்று வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அவர் எனது அண்ணனின் மனைவி ஆவார். அ.சா.1யை எனக்கு தெரியும். அவர் எனது அம்மா ஆவார். எனது அம்மாவிற்கு சொந்த 39 சென்ட் நிலத்தை என் அண்ணன் என் அம்மாவை ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டான். அதன் பிறகு என் அம்மாவை அடித்து வீட்டை விட்டு விரட்ட வேண்டும் என்ற நோக்கததில் அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார்கள். கடந்த 11.02.2019ம் தேதி என் அம்மா வீட்டில் இருந்த போது குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அப்பாவும், குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சேர்ந்து என் அம்மாவின் காலை பிடித்து இழுத்து வெளியில் தள்ளி என் அம்மாவின் தலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அப்பா கம்பியால் அடித்துள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என் அம்மாவின் மீது ஏறி எனது அம்மாவின் கழுத்தில் இருந்த செயினை இழுத்து பறித்துவிட்டார்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஜெயலெட்சுமி என் அம்மாவின் கழுத்தை கடித்து இழுத்துவிட்டார். வீட்டிற்கு பக்கத்தில் இருந்தவர்கள் சத்தம் கேட்டு என் அம்மாவை காப்பாற்றி ஆம்புலன்ஸ் மூலமாக தக்கலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது குறித்து எனக்கு தகவல் தெரிந்து நான்

மருத்துவமனைக்கு வந்து அம்மாவை பார்த்துவிட்டு இது குறித்து புகார் கொடுத்தோம். சம்பவத்தை உஷா, பகவதி அம்மாள் ஆகியோர் நேரில் பார்த்தார்கள். போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தர்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

குற்றம் சுமத்ததப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து உத்தரவிடப்படுகிறது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 10/2020 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. மீனா | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ.ஐயப்பன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் நெய்யாற்றின்கரை முகவரியில் வசித்து வீட்டு வேலைக்கு சென்று வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அவர் எனது மருமகள் ஆவார். கடந்த 11.02.2019ம் தேதி கொல்லன்விளை சாஸ்தான் கோவில் தெருவில் உள்ள எனது வீட்டில் மாலை 06.00 மணிக்கு எனது மருமகளின் அப்பா என்னுடைய வீட்டிற்கு வந்து கத்தியால் எனது இடது பக்க தலையில் அடித்தார். குற்றம்சுமத்தப்பட்ட நபர் கம்பியால் என்னை அடித்து, கழுத்தை பிடித்து கடித்து, கழுத்தில் இருந்த 5 பவுண் செயினை அறுத்துஎடுத்து என்னை விடமாட்டேன், விடமாட்டேன் என்று சொல்லி மாறி மாறி இருவரும் அடித்தார்கள்.

எனது 40 சென்ட் நிலத்தை எனது மகனும் மருமகளும் சேர்ந்து கூட்டம் போட்டு எனக்கு தெரியாமல் என்னிடம் கையொப்பம் வாங்கி எடுத்துக் கொண்டு என்னை வீட்டில் இருந்து விரட்டியடித்தார்கள். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில்புகார் கொடுத்தேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தக்கலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான்.அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு**

**அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குற்றம் சுமத்ததப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து உத்தரவிடப்படுகிறது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .